பெருநகர சென்னை மாநகராட்சி

செய்தி வெளியீடு

செ.வெ.எண். 643 **நாள்: 02.11.2026**

பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் டாக்டர் ஜி.எஸ். சமீரன், இ.ஆ.ப., அவர்கள், முரசு புயலினை முன்னிட்டு, திருவொற்றியூர் மண்டலம், இராமநாதபுரம் 1ஆவது தெருவில் உள்ள மாநகராட்சி சமூக நலக் கூடத்திற்கு முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக வருகை தந்துள்ள தேசிய பேரிடர் மீட்புப் படைக் குழுவினருடன் கலந்துரையாடி, மீட்பு உபகரணங்களை இன்று பார்வையிட்டார்.

இன்று (02.11.2026) மாநகராட்சி ஆணையாளர் டாக்டர் ஜி.எஸ். சமீரன், இ.ஆ.ப., அவர்கள், முரசு புயலினை முன்னிட்டு, பெருநகர சென்னை மாநகராட்சி, திருவொற்றியூர் மண்டலம், வார்டு-04க்குட்பட்ட இராமநாதபுரம் 1ஆவது தெருவில் உள்ள மாநகராட்சி சமூக நலக் கூடத்திற்கு முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக வருகை தந்துள்ள 30 பேர் கொண்ட தேசிய பேரிடர் மீட்புப் படைக் குழுவினருடன் கலந்துரையாடி, மீட்பு உபகரணங்களைப் பார்வையிட்டார்.

முரசுப் புயலினை முன்னிட்டு, காற்றும் மழையும் அதிக அளவில் இருக்கும் என்பதை எதிர்பார்த்து தேசிய பேரிடர் மீட்புப் படை குழுவினர் முன்னெச்சரிக்கையாக வரவழைக்கப்பட்டுள்ளனர். மேலும், பொதுமக்களுக்கு பாதுகாப்பாகவும், எச்சரிக்கையுடனும் இருந்திடவும், தாழ்வானப் பகுதிகளில் உள்ள மக்கள் நிவாரண மையங்களுக்கு சென்றிடவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் கண்காணிப்புடன் தயார் நிலையில் பணிகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் ஆணையாளர் அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்வின் போது, தேசிய பேரிடர் மீட்பு படை ஆய்வாளர் திரு.ஸ்ரீகுமார் மண்டல அலுவலர் திரு.சங்கர், செயற்பொறியாளர்கள் திரு.ஜெயராமன், திரு.பாண்டியன் மற்றும் மாநகராட்சி அலுவலர்கள் உடனிருந்தனர்.

செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,
பெருநகர சென்னை மாநகராட்சி.